உ

சிவமயம்



யாழ்ப்பாணம் தென்மராட்சி உசன் மிருசுவிலைப் பிறப்பிடமாகவும்,
வசிப்பிடமாகவும் கொண்ட

# திரு. விநாசித்தம்பி நடராசா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவுக் கலசம்

31.10.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



யாழ்ப்பாணம் தென்மராட்சி
உசன் மிருசுவிலைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

# திரு.வினாசித்தம்பி நடராசா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## நினைவு மலர்

**31.10.2009**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்



எம்மை பேணி வளர்த்த
ஒளி விளக்கே எம்முடன்
வாழ்ந்த காலங்கள் பசுமை
நிறைந்த நினைவுகள்.
எங்கள் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும்
ஒளி ஊட்டிய அன்புத்தெய்வமே எம்
உயர்வுகண்டு மகிழ்ந்திருந்த
வேளையில் வானுறையும் தெய்வம்
ஆகிவிட்ட எமது அன்புப் அப்பாவின்
திருப்பாதங்களுக்கு இம்மலரை
சமர்ப்பிக்கின்றோம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வமாகிவிட்ட
எங்கள் குடும்பத்தின் தீபம்

தோற்றம்
03 – 07 – 1936



மறைவு
01 – 10 – 2009

அமரர்

# விநாசித்தம்பி நடராசா

அவர்கள்

## திதி நிர்ணய வெண்பா

திகழுறும் விரோதி ஐப்பசி முதலாம்நாள்
ஈண்டு பூர்வபக்க துவாதசி திதியில்
செய்தவத்து நல்லோன் நடராசா மண்ணீத்து
ஐயனவன் தாளடைந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப் பாக்கள்

## விநாயகர் துதி



பிடியத னுருவமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடுமெ வரிடர்
கடிகண பதிவர அருளினர் மிகக்கொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

## தேவாரம்

தந்தையார் போயினார் தாயாரும்
போயினார் தாமும் போவார்
கொந்தவேல் கொண் டொரு கூற்றத்தார்
பார்க்கின்றார் கொண்டு போவார்
எந்தநாள் வாழ்வதற்கே மனம்
வைத்தியால் ஏழை நெஞ்சே
அந்தணா ரூர்தொழு துய்ய லாம்
மையல் கொண் டஞ்சல் நெஞ்சே

## திருவாசகம்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலும் காண் ஏடி
பூசுவதும் பேசுவதும் பூண்பதுமென் கொண்டென்னை
ஈசன் அவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழேலோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர்விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக்கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புவா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்புவேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் - உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போது உன்அடியின்கீழ் இருக்க என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி யப்பமொடவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியி லுறைபவர்
கற்பகமென வினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவோனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிரமணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குறை மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்கமன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழிபடு தெய்வங்களின் அருள்வேண்டல்



### அருளும் கஜகேணியப்பா

மெய்மை அன்புடன் வணங்கும் அடியவர்க்கு
வேண்டுவன வழங்கும் அப்பனே விநாயகனே
கஜகேணியில் உறைந்து அருள்மழை பொழிபவனே
உன்பதம் பணிகின்றோம் அருள் புரிவாய் என்றும்நீ



### அருள்மிகு உசன் கந்தக்கடவுள்

உமைக்கு ஒரு முத்தே உசனுறை காப்பவனே
ஓங்கார சக்தியே ஆனைமுகன் தம்பியே
தஞ்சமென்று வரும் அடியாரை
அருள் வழங்கிக் காத்திடப்பா
தொல்லை தரும் பிணிகள் நீக்கி
சிறப்புடன் உயிர்கள் வாழ
கருணையை வழங்கிடுவாய்
காத்து அருள் புரிந்திடுவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அருள்மிகு புதுக்குளத்து அம்மன்

புதுக்குளத்து அம்மனே புதுமை பல புரிபவளே
உன்பாதம் தஞ்சமென்று நாடி வரும் அடியவர்க்கு
அபயம் அளித்திடுவாய் அன்புடன் காத்திடுவாய்
கண்ணகையே உன்பாதம் பணிகின்றோம்.

## அருள்மிகு உசன் வீரபத்திரர்

தேன் சொரியும் மலர்தூவி நின் திருவடிகள் துதி செய்தான்
திருமகனாம் செம்மல் நடராசா தீபமானான்
வானுலகில் வாழும் மாண்புமிகுதேவா
வரமளித்து சாந்திபெற வழிசெய்வாய் என்றும்

## அருளும் காசி முருகன்

சீர்மலிந்து சிறப்புமிகு விடத்தற்பளை ஊரில்
திருவிளங்கும் வயற்கரையில் கோயில்கொண்டு
காசியால் நாவலர் கொணர்ந்த முருகன்
பிறவிநோய் பிரிவதற்கு வழியைக்காட்டும்
கார்குழலும் உமைமைந்தா கந்தா காப்பாய்
காலனவன் கவர்ந்திந்து எம் தந்தை நடராசா
பார்புகழ் வாழ்வொழித்து உன்பாதம் வந்தான்
பாதுகாத்து அமைதி பெற அருளை ஈவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரத்துவம் அடைந்த திரு.விநாசித்தம்பி நடராசா அவர்களின் வாழ்க்கை வரலாறு

பேரும் புகழும் பொலிந்து விளங்கிடும் தென்மராட்சிப்பகுதியிலே தெங்கு, பனை, பலா, மா, சோலை வயல், குளங்கள் வளம் சேர்க்கும் உசன் பகுதியிலே உயர் குடி செம்மல் விநாசித்தம்பி சின்னத்தங்கம் தம்பதியினரின் மகனாக 03.07.1936 இல் வந்து உதித்தவரே இம்மலருக்குரியவரன திரு.விநாசித்தம்பி நடராசா ஆவார். இவரது உடன் பிறப்புக்கள் அக்கா கனகேஸ்வரியும் தம்பி கனகலிங்கமும் ஆவார்.

மெல்ல அடியூன்றி அன்னை மண்ணில் மழலையாய்த் துள்ளித்திரிந்து பிள்ளைப்பருவம் கனிந்து வரவே பள்ளிப் படிப்பில் காலடி வைத்திட ஆரம்பக்கல்வியை யா/உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்திலும் மேற்படிப்பை யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும் தொடர்ந்தார். இவர் தனது இருபதாவது வயதிலே 28.10.1956 விவசாய விரிவாக்க உத்தியோகத்தராக நியமனம் பெற்றார். இவர் அம்பாறை, மன்னார் மாவட்டத்தில் நட்டாங்கண்டல் ஆகிய இடங்களில் தனது பணியைச் சிறப்பாக ஆற்றினார்.

யெளவனப்பருவம் விரைந்து வந்திட இல்லற வாழ்க்கையில் இணைந்திட விரும்பி கைதடிப்பகுதியிலே சைவவேளாளர் குலத்தில் வந்துதித்த குணரத்தினம் தங்கரத்தினம் தம்பதிகளின் ஏகபுத்திரியாக வந்துதித்த பரமேஸ்வரி அவர்களை திருமணம் செய்தார். இத்தம்பதிகளின் இல்லறம் என்னும் நல்லறத்தின் பயனாக வசந்தி, சுகந்தி, ஜெயந்தி, சுமதி, லஜன், காண்டீபன், கடாட்சன் என்னும் பிள்ளைச் செல்வங்கள் கிடைத்தனர்.

உற்ற வயதில் உரியபடி கல்வி தந்து தனது பிள்ளைகளுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றியவர் நடராசா அவர்கள் அரசகரும மொழியான சிங்களத்தில் சித்தி பெறாமையால் 02.08.1976 இல் வேலையிலிருந்து நீக்கப்பட்டார். பின்னர் விவசாயம் செய்தே தன் குடும்பத்தைக் கவனித்தார். அவ்வாறு துன்பப்பட்ட வேளையில் அண்ணனுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோளோடு தோள் நின்று உதவியவர் பாசமுள்ள தம்பி கனகலிங்கம் அவர்கள் பின் முயற்சியின் பயனாக 2000 ஆம் ஆண்டிருந்து ஓய்வூதியம் கிடைத்தது.

முத்தவள் வசந்தியோ இக்குடும்பத்தின் முத்து நடராசா அவர்கள் தன் வாழ்க்கைத் துணையை இழந்து நின்ற போதும் குடும்பத்தைச் சீராக நடாத்த உதவினார். மூத்த மகளின் எண்ணத்துடன் வாழ்ந்த நடராசா அவர்கள் தன் இரண்டாவது மகள் சுகந்தியை சாவகச்சேரியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளையின் மகன் அமிர்தலிங்கத்துக்கு மணம் முடித்து மகிழ்வுற்றார். அவர்கள் இல்லறம் என்னும் நல்லறத்தின் பயன் அபிதா, அமிர்தா, அபர்ணா என்னும் செல்வங்களைப் பெற்றனர்.

மூன்றாவது மகளான ஜெயந்திக்கு மீசாலையைச் சேர்ந்த சிவானந்தத்தின் மகன் சிவபாலனை(சுவிஸ்) திருமணம் செய்து கொடுத்ததன் பயன் கிடைத்த பிள்ளைச் செல்வங்களே பாருகன், பானுசன், சபீனா.

பெண்களில் இளையவளாம் சுமதி கைதடியைச்சேர்ந்த மாமன் மகனான இராஜசேகரனை(இலண்டன்) மணந்ததன் பயன் கிடைத்த செல்வங்களே துர்க்காவும், கரிசும்.

தான் ஆசையாகப் பெற்றெடுத்த அன்பு மகன் லஜனை உசனைச்சேர்ந்த யோகச்சந்திரன் மகள் கஜேந்தினிக்கு மணம் முடித்துக்கொடுத்தார். அவர்கள் இல்லற வாழ்வில் இணைந்ததன் பயனே சங்கவி என்னும் குழந்தை கிடைத்தது.

நாட்டின் போர்ச்சூழ்நிலை காரணமாக கடாட்சன் கனடாவிலும் காண்டீபன் அமெரிக்காவிலும் வாழ்கின்றனர். அம்மாவைப் பார்க்காது இறுதிக்கிரியைகளில் கடமை செய்ய முடியவில்லையே என்று கனத்த இதயங்களுடன் கண்ணீர் சொரிந்து நின்ற காண்டியும் கடாவும் அப்பாவின் திடீர் இழப்பால் செய்வதறியாது திகைத்து துன்பப்படுகின்றனர்.

நடராசா அவர்கள் உசன் முருகன், கஜகேணிப்பிள்ளையார், புதுக்களத்து அம்மன், வீரபத்திரர், வயற்கரை முருகன் ஆலயங்களுக்குத் தன்னாலான தொண்டுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றிவந்ததார். தீராத பக்தி கொண்டவர் அயலவர்கள் அவரை அன்பாகத் துரையண்ணர் என அழைப்பர். வெள்ளை உள்ளம் கொண்ட துரை அண்ணை அயலவர்களுடன் எப்பொழுதும் அன்பாகவே சிரித்த முகத்துடன் பழகுவார். எப்பொழுதும் யாரைக்கண்டாலும் வணக்கம் சொல்லும் இயல்பு சிறுபிள்ளைகள் அவரைக்கண்டால் கதைத்தே செல்வர். அவரின் பொழுதுபோக்கு பசுக்கள் வளர்ப்பது சாயங்காலம் என்றால் பசுக்களைத்தேடி நாவல் மரத்தடியில் நிற்கும் துரை அண்ணையை பசுக்களும் தேடுகின்றன. அயலவரும் தேடுகின்றனர். திடீர் இழப்பு குடும்பத்திற்குப் பேரிடி. பேர்த்தி அபிக்கோ மறக்க முடியாத சோகம் அயலவர்க்கோ துரை அண்ணரைக் காண மாட்டோமோ? என்ற ஏக்கம்.

மேலே குறிப்பிட்ட பெருமைகளுடன் வாழ்ந்த நடராசா அவர்கள் தனது வாழ்க்கையின் இறுதிக்காலத்தில் தனது அன்பான அக்காவுடனும் மூத்த மகள் வசந்தியுடனும் உறவுகளுடனும் இந்தியாவிற்கு மேற்கொண்ட தலயாத்திரை அவருக்கு கிடைத்த பெரும் பேறு நடராசா அவர்கள் நோய் வந்து பலகாலம் படுக்கவில்லை பதினொரு நாள் வைத்தியசாலை வாழ்க்கையுடன் அவரது பயணம் முற்றுப்பெற்றது.

செப்பிட முடியாத சீரிய குணத்தான் ஐப்பசி மாதம் முதலாம் நாள் வியாழக்கிழமை பூர்வபக்க துவதாசியில் இறைவன் அடிசேர்ந்தார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவாற்றா நெஞ்சங்களின் இதயத் தவிப்பு

## மக்களின் இதயக்குமுறல்

எம் குடும்ப வளர்ச்சிக்காக
ஏற்றமிகு பணிகள் ஆற்றி
எமையெல்லாம் உயர்த்தி வைத்த
ஏற்றம் மிகு அம்மாவை இழந்த நாம்
உங்கள் முகம் பார்த்து ஆறிடுவோம்
என்று எண்ண எமன் வந்து பறித்திட்டான்
எம் அப்பாவின் உயிரை – இனி
நாம் என் செய்வோம் என்று
அரற்றி நிற்கும் வசந்தியும் சுகந்தியும்
ஆநிரையைப் பிரிந்த கன்று போல
எம் குடும்பச்சோலையை விட்டுப்
பிரிந்து வாழக்கைக்காக பொருளுக்காக
வெளிநாடு சென்ற ஜெயந்தியும், சுமதியும்
அம்மாவின் அந்திமக்கடன் செய்யவில்லை
என்றேங்கி நிற்கையிலே
மின்னாமல் முழுங்காமல் சென்றுவிட
அப்பாவின் அந்திக்காலக் காட்சிகளை
காணாத பாவியானோம் என
விக்கித்து நிற்கையிலே – அப்பாவின்
நிழலில் வாழ்ந்து விட எண்ணிய
லஜன் அவன் சிந்துகின்றான் கண்ணீரை
இரட்டையராய் பிறந்து விட்ட
காண்டியும் கடாவுமோ
அம்மாவை இழந்த சோகத்தில்
அலைகடலில் துரும்பு போல
தத்தளித்து நிற்கையில்
சொல்லாமல் கொள்ளாமல் சென்ற
அப்பாவை எண்ணி இலங்கைக்கு
வந்து நாம் யாரை இனிப்
பார்ப்பது எம்மனம் தனை
வாட்டும் சோகம் மாறுமோ?........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடன் பிறப்பு சகோதரியின் புலம்பல்

கூடியொன்றாக வந்தோம்
குடும்பத்தில் நன்றாய் வாழ்ந்தோம்
தேடியே நன்மை பல சேர்த்து
வைத்துச் சென்று விட்டாய்
நாடியே கடைசிக் காலம்
நாமிருவர் சென்ற இந்தியதலயாத்திரையை
வாழுங்காலத்தில் மறப்பேனா – என
மனம் பேதலிக்கும் கனகேஸ்வரியவள்

## மருமக்கள் புலம்பல்

அன்புக்கு இலக்கணமாய் நின்ற மாமா
அறிவுடன் ஏற்றமிகு வாழ்க்கை வாழ
வழிகாட்டியாய் கலங்கரை விளக்காய் நின்றீரே நீரும்
பாசமென்னும் கயிற்றிலே எம்மைப்பூட்டி
பக்குவமாய் பல வார்த்தை எடுத்தியம்பிடுவீர்
மின்னாமல் முழங்காமல் சென்ற செய்திகேட்டு
துடித்து நின்றோம் நாமும் செய்வதறியாது
எனினும் அமலனடி சேர இறைஞ்சுகின்றோம் நாமும்

## பேரப்பிள்ளைகள் ஆதங்கம்

உண்ணும் போதும் உறங்கும்போதும்,
கல்வி கற்க எண்ணும் போதும்
தத்தாவைத் தேடி நிற்கும் அபிதாவும்
அன்பு மொழி பேசி ஆசையுடன்
அழைத்துச் செல்லும் தாத்தாவைத்
தேடி நிற்கும் அமிர்தாவும் அபர்ணாவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாத்தாவைப் பார்க்க வர வருட
இறுதியில் ஆயத்தம் செய்த
பாருகனும் பானுசனும் சபினாவும்
தாத்தாவின் கொஞ்சல் மொழியை விரும்பும்
துர்க்காவும் கரிசும்
அப்பப்பாவை இழந்த சோகம் அறியாத
சங்கவியும் எங்கு சென்றீர்கள்
தாத்தா என ஏங்கி நிற்கின்றனர்.

## உடன் பிறப்புச் சகோதரன் உள்ளக்குமுறல்

ஒரு தாய் வயிற்றில் பிறந்து
ஒற்றுமையாக ஓர் இல்லத்தில்
வாழ்ந்து விட்ட தம்பி கனகலிங்கம்
அண்ணனை இழந்து அரற்றுகின்றான் பல சொல்லி
எங்கே சென்றாய் நீ?
எனக்கு யார் உள்ளார் ஆறுதல் சொல்ல
உன் ஆத்மா சாந்தி பெற
வேண்டுகின்றேன் கந்தனிடம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியையான திருமதி கஜேந்தினி லஜன்
அவர்களது அன்பு மாமனார்

**அமரர் விநாசித்தம்பி நடராஜா**

(01.10.2009) அன்று காலமாகியதையிட்டு துயரடைகின்றோம். அவரது
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலை.

(சி/531387)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிசொட்டும் கண்ணீர்காணிக்கை

மண்மகிழ
07 ☆ 03 ☆ 1936



கண்நெகிழ
01 ☆ 10 ☆ 2009

எமது கழகத்தின் பொருளாளர் நடராஜா லஜன்
அவர்களின் பாசமிகு தந்தையார்

## அமரர்
## விநாசித்தம்பி நடராஜா
அவர்கள்

### உன் பிரிவு தந்த பேரிடி...............!

மின்னாமல் முழங்காமல் இடியொன்று வீழ்ந்தது போல்
புயற்காற்று வீசாமல் மலையொன்று சாய்ந்தது போல்
புல்லரிக்கும் செய்தி தந்து புயலாகிப் போயினையோ?...
வல்லோராய் எம்முடன் பழகியவரே!
நிலையற்ற இவ்வுலக வாழ்வு
போதுமென்று எண்ணியா உற்றவரை
துடிக்க வைத்து நிஜம் காண விரைந்தீரோ?
உன் இறைபயணம் சாந்திபெற
இறைஞ்சுகின்றோம் இறைவன் தாழ்.

அன்னாரை இழந்து பரிதவிக்கும் குடும்பத்தினர்க்கும்
உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும்
எமது இதயம் நெகிழ ஆழ்ந்த அனுதாபங்களையும்
அமரருக்கு எம் இறுதி அஞ்சலிகளையும் தெரிவித்து
இறைவன் காலடியில் அவரின் ஆத்மா
நித்திய ஒளியாய் நிறைந்திருக்க
அவன் தாள் பணிகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

02-10-2009
உசன், மிருசுவில்

சிறி முருகன் விளையாட்டு கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீரில் கரைகின்றோம்

அன்னை மடியில்
07
03
1936



ஆண்டவன் அடியில்
01
10
2009

உசன் ஐக்கிய நாணய சங்க சிரேஸ்ட உறுப்பினர்

## அமரர் வினாசித்தம்பி நடராசா அவர்கள்

அன்பிலுயர் பெருமகனாய் ஆற்றலுள்ள நல்லவனாய்
இன்பமுடன் வாழ்ந்துயர்ந்த உத்தமனே
இங்கெமை நோகவைத்து ஏன்பறந்தாய் காலனுடன்
எங்குமைப்போல அன்பனைநாம் காண்போமையா?
செய்தொழிலே தெய்வமென பலமுயற்சி செய்துழைத்து
பிள்ளைகளைப் பேணிநின்ற பெரியவனே
உன்குடும்பம் சுற்றமெல்லாம் உன்நினைவால் வாடினும்
அங்கமைதி காண்பதுண்மை அரனடியில்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாரின் துயரில் நாமும் பங்கேற்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

உசன்,
மிருசுவில் .

ஐக்கிய நாணய சங்கம்

திருக்கணித பதிப்பகம் - சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலா வல்லி மாலை



வெண்டாமரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டாமரைக்குத் தகாதுகொ லோசகமேழு மளித்து
உண்டானுறங்க வொழித்தான்பித் தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவை கொள் கரும்பே சகலகலாவல்லியே

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும்பணியிற் பணித்தருள் வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே சகலகலாவல்லியே.

அளிக்குஞ் செந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன்னருட்கடலில்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோவுளங்கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே சகலகலாவல்லியே

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக்கடலே சகலகலாவல்லியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சப்பிதந்தரு செய்யபொற்பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென் னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன்செந் நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத்திருந்தாய் சகலகலாவல்லியே

பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற்பனுவலும்யான்
எண்ணும் பொழுதொளி தெய்த நல்காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும் வெங்காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய் சகலகலாவல்லியே

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பார்
கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங்கலைத்தமிழ்த் தீம்பா லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப்பேடே சகலகலாவல்லியே

சொல்விற்பனமும் அவதான முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுத்தந் தடிமை கொள் வாய்நளினாசனஞ் சேர்
செல்விக் கரிதென் றொருகால முஞ்சிதை யாமை நல்குங்
கல்விப்பெருஞ் செல்வப்பேறே சகலகலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார் நிலந்தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே சகலகலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்டமன்னருமென்
பண்கண்டளவிற் பணியச்செய் வாய்படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும் விளம்பிநுன் போற்
கண்கண்ட தெய்வமுளதோ சகலகலாவல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு

1. நாசா விண்வெளி ஆய்வு நிலயத்தினால் புதிதாக கண்டு பிடிக்கப்பட்ட விமானம்.

   போயின் $S_4$ $B_8$

2. புதிய உலக அதிசயத்தை வெளியிட்ட அமைப்பு.

   நியூ ஓபன் வேல்ட்

3. உலகில் முதலாவது கணனியை வடிவமைத்த நிறுவனம்.

   IBM

4. முதன் முதலாக செவ்வாய் கிரகத்திற்கு செய்மதி அனுப்பிய நாடு?

   ரஷ்யா

5. மிகச் சிறிய ரோபோவை கண்டுபிடித்த நாடு?

   இஸ்ரேல் (1mm)

6. 16.05.2007ல் புத்தளம் கற்பிட்டி கடலில் மூழ்கிய தீவு?

   பள்ளியாவத்தைத் தீவு

7. கல்விக்காக முதன்முதல் செயற்கைக் கோள் அனுப்பிய நாடு?

   இந்தியா

8. விமானங்கள் கப்பல்களை வழங்கும் கடற்பரப்பு என அழைக்கப்படுவது.

   பெர்மியூடா கடற்பரப்பு

9. பாகிஸ்தான் உளவுத்துறையின் பெயர்.

   ISI

10. இலங்கையில் சினிமா கிராமம் அமைக்கப்படவுள்ள இடம்.

    பெந்தோட்டை

11. இலங்கையில் விண்கல ஏவுதளம் அமைப்பதற்கு மிகவும் வாய்ப்பான இடமாக விஞ்ஞானிகளால் கருதப்படுவது.


    சம்பூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எம் குலவிளக்காய் குடும்பவிருட்சமாய் எமைத்தாங்கி நின்ற எம் அன்புத்தெய்வம் நோயுற்று யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது சிகிச்சை அளித்த வைத்தியர்களுக்கும் எம் தெய்வம் எம்மைவிட்டுப் பிரிந்து இறைபதம் அடைந்தபோது ஓடோடி வந்து உதவி செய்தோர் உருகி வந்து அஞ்சலி வழங்கிய நண்பர்கள் துயரில் பங்குகொண்ட அயலவர்களுக்கும் மேலும் இவரது இறுதிக்கிரியைகளை நடாத்திய குருமார்கள் இதற்கு உதவியோர் இறுதியாத்திரையில் கலந்துகொண்டோர், சுடுகாட்டலுவல்கள் அனைத்திற்கும் உதவியோருக்கும் இனிய நன்றிகள். இவரது அந்தியேட்டிக்கிரியைகள் இன்று நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்ச்சிகளை நடாத்திய அந்தணருக்கும் இவற்றுக்கு உதவிய அனைவருக்கும் மற்றும் இன்றைய ஆத்மசாந்தி வீட்டுக்குருத்திய நிகழ்ச்சிகளிலும் கலந்து சிறப்பித்த அனைவருக்கும் மற்றும் இம் மலரினை அச்சிட்டு உதவிய கொடிகாமம் சிவகஜன் அச்சகத்திற்கும் எமது இதயம் கலந்த நன்றிகளைத் தெரிவித்து நினைவில் நிறுத்துகின்றோம்.




அன்புடன்
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்.



சிவகஜன் பதிப்பகம், கொடிகாமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org